

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (29.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், சட்டமன்றத் தேர்தலில் ம.தி.மு.க. சார்பில் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ள செந்தில்நாதன், பூமிநாதன், ராஜேந்திரன், செந்தில் செல்வன் ஆகியோர் சந்தித்து, வாழ்த்துப் பெற்றனர். உடன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ, நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (29.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், சட்டமன்றத் தேர்தலில் தே.மு.தி.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் தே.மு.தி.க. பொதுச் செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த், வி. இளங்கோவன், அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், ஏ.ஆர்.இளங்கோவன், எல்.வெங்கடேசன், அனகை டி. முருகேசன், டி.கிருஷ்ணமூர்த்தி, கே.பி. பிரதாப், டி.பி. சரவணன் ஆகியோர் சந்தித்து, வாழ்த்துப் பெற்றனர். உடன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, செய்தி தொடர்பு தலைவர் டி. கே.எஸ்.இளங்கோவன், தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் பொருளாளர், நாடாளுமன்ற உறுப்பினர் எல்.கே.சுதீஷ், தலைமை நிலையச் செயலாளர் பார்த்தசாரதி மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (29.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தி.மு.க. கூட்டணியின் சார்பில் வேட்பாளராக போட்டியிடும் முக்குலத்தோர் புலிப்படை தலைவர் கருணாஸ் சந்தித்து, வாழ்த்துப் பெற்றார். உடன், கழக துணை பொதுச் செயலாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, அமைச்சர் மு.பெ.சாமிநாதன், செய்தி தொடர்பு தலைவர் டி.கே. எஸ்.இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (29.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், அகில இந்திய மஜ்லிஸ் கட்சியின் ஒவைசி) பொதுச் செயலாளர் ஏ.எம். ரசூல் மொஹைதீன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, சட்டமன்றத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர். உடன், கழகப் பொருளாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், முன்னாள் அமைச்சர் அன்வர் ராஜா மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

## தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## திருவாரூரில் நாளை தொடங்குகிறார்!

**தமிழ்நாடு முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.**

**இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நாளை (மார்ச் 31ஆம் தேதி) திருவாரூரில் தொடங்குகிறார்.**

**தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முதற்கட்டமாக முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், ஊரான திருவாரூரில் பரப்புரையை தொடங்குகிறார்.**



### தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் சுற்றுப்பயண விவரம்

**31.03.2026 (செவ்வாய்க் கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| மாலை 5 மணி | **திருவாரூர்** **தெற்கு ரத வீதி** (பொதுக்கூட்டம்) | திருத்துறைப்பூண்டி, திருவாரூர், நன்னிலம், மன்னார்குடி |

**01.04.2026 (புதன் கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| காலை 9 மணி | **திருச்சி** **உழவர் சந்தை** (பொதுக்கூட்டம்) | திருச்சி மேற்கு, திருச்சி கிழக்கு, திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்சநல்லூர் திருவரங்கம், மணப்பாறை, முசிறி, துறையூர் |
| மாலை 5 மணி | **கரூர்** **ராயனூர்** (பொதுக்கூட்டம்) | அரவக்குறிச்சி, கரூர், கிருஷ்ணராயபுரம், குளித்தலை |

**02.04.2026 (வியாழக் கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| காலை 9 மணி | **ஈரோடு** **சித்தோடு** (பொதுக்கூட்டம்) | பவானிசாகர், ஈரோடு மேற்கு, மொடக்குறிச்சி, பெருந்துறை, அந்தியூர், கோபிசெட்டிபாளையம், ஈரோடு கிழக்கு, பவானி |
| மாலை 5 மணி | **கோவை** **கொடிசியா மைதானம்** (பொதுக்கூட்டம்) | சூலூர், கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர் தெற்கு, சிங்காநல்லூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, வால்பாறை |

**குறிப்பு :** கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள் : 29,03,2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.